DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF Vth ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE

VALLIYOOR

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | S.C.231/2023 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | PW-4 | Prosecution (LW-12) |
| | | Defence |
| | | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சுகந்தி |
| Husband's/Father's Name | : | க/பெ பாலாஜி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of September 2026.

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> :-

நான் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இளநிலை தடயவியல் வல்லுநராக பணிபுரிகிறேன். கடந்த 31.10.2021ம் தேதி நான் பணியில் இருந்தபோது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சட்டம்சார்ந்த மருத்துவத்துறை பேராசிரியர் Posterm No.TM No.1743/2022 தொடர்புடைய உவரி காவல் நிலைய குற்ற

எண்.133/2022 வழக்கில் இறந்துபோன சிங்காரவேலன், ஆண், வயது 40 என்பவரின் பிரேத பரிசோதனையின்போது சேகரிக்கப்பட்ட உள்ளுறுப்புகளை 2ம்நிலை காவலர் பாலமுருகன் என்பவர் மூலம் கிடைக்கப்பெற்ற வயிற்றுபகுதி, குடல், கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றை பரிசோதித்தபோது புளூமென்த்திரி என்ற திரவம் காணப்பட்டது. பிற உறுப்புகளை பரிசோதித்தபோது அந்த திரவம் எதுவும் காணப்படவில்லை. புளூமென்த்திரி திரவம் என்பது பைத்திராய்டு வகையை சேர்ந்த ஒரு பூச்சிக்கொல்லி மருந்து என்று நான் அறிக்கை வழங்கினேன். உடல் உள்ளுறுப்புகள் ஆய்வறிக்கை அ.சா.ஆ.1. போலீசார் இது சம்பந்தமாக விசாரித்தார்கள், எனது பரிசோதனை குறித்து சொன்னேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்தவரின் உடல் உறுப்புகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்காக காலதாமதமாக அனுப்பப்படும்பொழுது மருந்தை உட்கொண்டவரின் உடல் உறுப்புகளில் அந்த மருந்தின் அளவு மாறுபடுமா என்று கேட்டால் அப்படி மாறுபடாது. இறந்த சிங்காரவேலனின் இறப்பிற்கான காரணம் எதுவும் நாங்கள் கொடுத்த அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். உள்ளுறுப்புகளை ஆய்வு செய்து அறிக்கை கொடுப்பது மட்டுமே எங்களது பணி. இறப்பிற்கான காரணம் எங்களது அறிக்கையில் சொல்லப்படுவது கிடையாது. புளூமெத்திரின் மருந்தை உட்கொண்டவர் உடம்பில் எந்த நேரத்தில் செரிமானம் ஆகப்பட்டது என்று கேட்டால் என்னால் சொல்ல

இயலாது. மருத்துவரால் மட்டுமே சொல்ல முடியும். புளூமெத்திரின் எந்த அளவு உடல் உள்ளுறுப்புகளில் இருந்தது என்று எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். என்ன மருந்து என்று மட்டுமே எங்களது அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

<u>மறு விசாரணை</u>

இல்லை

Vth Additional Sessions Judge,
Valliyoor.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF Vth ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE
VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. | .. | S.C.231/2023 |
| Miscellaneous | .. | .. | |
| Preliminary Register | .. | .. | |
| Sessions | .. | .. | |

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | PW-5 | Prosecution (LW-14) |
| | | Defence |
| | | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ஜெ.ஜெயக்குமார் |
| Husband's/Father's Name | : | த/பெ மூ.ஜெயராமன் |
| Village | : | திருநெல்வேலி |
| Taluk | : | திருநெல்வேலி |
| Calling | : | |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of September 2026.

எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை :-

நான் தற்பொழுது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரியில் சட்டம்சார்ந்த மருத்துவத்துறையில் முதன்மை குடிமைமருத்துவர் மற்றும் போதகராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.10.2022 அன்று இதே கல்லூரியில் நான் பணியில் இருந்தபொழுது உவரி காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதம் குற்ற எண்.133/2022 ன்படி

திரு.பாலமுருகன், காவலர் எண்.986 அவர்களிடம் இருந்து பெறப்பட்டு சிங்காரவேலன், 40 வயது ஆண்பிரேதத்தின் மீது உடற்கூராய்வு செய்ய பணிக்கப்பட்டு வேண்டுகோள் கடிதம் பிற்பகல் 01.30 மணியளவில் பெறப்பட்டது. உடற்கூராய்வு அதேநாள் பிற்பகல் 01.45 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. பிரேதமானது உடல் முழுவதும் விரைப்பு தன்மையுடனும், வாயில் வெள்ளை நுரையுடனும், காக்கிகலர் அரைக்கை சட்டை, பழுப்புநிற ஷார்ட் மற்றும் ஊதாநிற கட்டம்போட்ட லுங்கி அணியப்பட்டிருந்தது. வெளிப்படையான காயங்கள் எதுவும் காணப்படவில்லை. இரு கைகளில் மட்டும் தோல் உறிந்து காணப்பட்டது. தலைப்பகுதியை உடல்கூராய்வு செய்தபொழுது தலைத்தோல், மண்டைஓடு, மூளைஜவ்வு, மண்டை ஓட்டின் கீழ்புறம் சீராக காணப்பட்டது. மூளை நீர்கோர்த்தும், மேல்புறம் உள்ள நாளங்கள் ரத்தம் தோய்ந்தும் காணப்பட்டது. வெட்டுத்தோற்றம் சீராக காணப்பட்டது.நெஞ்சுபகுதியை உடற்கூராய்வு செய்தபொழுது விலா எலும்புகள், இதயம், குரல்வளை மற்றும் குரல்வளை குறுத்தெலும்புகள் மற்றும் உணவுகுழாய் சீராக காணப்பட்டது. நுரையீரல்கள் திடத்தன்மையுடனும், வெட்டுத்தோற்றம் ரத்தம் தோய்ந்தும் அதில் இருந்து நுரையுடன் கூடிய திரவம் கசிந்து காணப்பட்டது. வயிற்று பகுதியை உடற்கூராய்வு செய்தபொழுது இரைப்பையில் 30 மில்லி அளவில் பழுப்புநிற திரவம் எவ்வித வாசனையும் இன்றி காணப்பட்டது. இரைப்பையின் உட்சுவர் திட்டுதிட்டாக ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல்

மற்றும் சிறுநீரகங்கள் சீராக காணப்பட்டன. அவற்றின் வெட்டுத்தோற்றம் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது. சிறுநீரக பை வெற்றிடமாக காணப்பட்டது. இடுப்பு எலும்பு மற்றும் தண்டுவட எலும்புகள் சீராக காணப்பட்டன. உடல் உள்ளுறுப்புகள் ரசாயன பகுப்பாய்விற்கு சேகரிக்கப்பட்டன. ரத்தமாதிரி ரத்தவகை கண்டறிய சேகரிக்கப்பட்டன. திசுக்கள் நோய் குறியியல் ஆய்விற்கு சேகரிக்கப்பட்டன. உடற்கூராய்வு அன்று பிற்பகல் 02.45 மணியளவில் முடிக்கப்பட்டது. முதல் கருத்தாக உடல் உள்ளுறுப்புகளின் ரசாயன பகுப்பாய்வு அறிக்கை மற்றும் திசுக்களின் நோய்குறியியல் அறிக்கைக்காக காத்திருக்கிறது என்று கருத்துக்கூறி சான்றிதழ் வழங்கினேன். இறுதியறிக்கையாக இறந்துபோனவர் புளூமெத்திரின் என்ற நச்சு உட்கொண்டதால் இறந்திருக்கக்கூடும் என்றும், ரசாயன பகுப்பாய்வில் உடல் உள்ளுறுப்புகளில் புளூமெத்திரின் கண்டறியப்பட்டுள்ளது என்று கருத்துக்கூறி சான்றிதழ் வழங்கினேன். 03.10.2022 ம் தேதிய பிரேத பரிசோதனை முதல்நிலை அறிக்கை அ.சா.ஆ.2. 06.12.2022 ம் தேதிய பிரேத பரிசோதனை இறுதியறிக்கை அ.சா.ஆ 3. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது பிரேத விசாரணையின் முதல் அறிக்கையில் இறந்தவரின் வயிற்று பகுதியை பரிசோதனை செய்தபோது 30 மில்லி லிட்டர் அளவில் பழுப்புநிற திரவம் காணப்பட்டதாகத்தான்

குறிப்பிட்டுள்ளேன். இறந்தவர் எத்தில் ஆல்ஹகைகால் உட்கொண்டால் வயிற்று பகுதியில் பழுப்புநிற திரவம் உருவாக வாய்ப்பு உள்ளதாக என்று கேட்டால் அவ்வாறு உருவாகாது. இறந்தவரின் தலையை கூராய்வு செய்தபோது அவரது வாய்பகுதியில் எவ்வித காயங்களும் காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். இறந்தவரின் வயிற்று பகுதியை கூராய்வு செய்தபோது இஞ்ஜிசாறு காணப்பட்டதா என்று கேட்டால் முதல்நிலை கூராய்வில் அவ்வாறு எதுவும் கண்டறிய முடியாது. எனக்கு கிடைக்கப்பெற்ற வயிற்று பகுதி ரசாயன அறிக்கையிலும் இஞ்ஜிசாறு இருந்ததாக எதுவும் கூறப்படவில்லை.

<u>மறு விசாரணை</u>

இல்லை

Vth Additional Sessions Judge,
Valliyoor.